# நாகர்கோவில் சபையின் தோற்றம்

**20**16-இல் (பெப்ருவரி 13) 150 ஆவது சபை நாளைக் கொண்டாடினோம். ஆனால் அதற்குள் 2018-19 நமது கோவிலின் இருநூறாம் ஆண்டு விழாவினைக் கொண்டாடத் தொடங்கியுள்ளோம். வாராந்திர சபை இதழ்களில் *இறை மக்கள் பணி வழி இறைப் பணியாற்றி வரும் இருநூறு ஆண்டுகளை நோக்கி...* (Towards 200 years of serving the Lord in serving the people...) என்ற இம்முத்திரை வாக்கியம் ஓராண்டாக இடம்பெற்று வருகிறது.

2018-இல் 152ஆம் சபைநாள். இதே ஆண்டில் நமது கோவிலின் 200ஆம் ஆண்டு தொடங்குகிறதே... அது எப்படி...? சபைக்குழு கூட்டத்தில் கூட இக்கேள்வி எழுப்பப்பட்டது இதுபோன்ற கேள்விகள் சபைமக்கள் பலரும் மிக்க ஆர்வத்துடன் இன்று கேட்கத் தொடங்கியுள்ளனர். நமது கோவிலின், சபையின் வரலாற்றை, குறிப்பாகத் தொடக்ககால வரலாற்றைத் தெரிந்து கொள்ள எல்லா இறைமக்களும் விரும்புவது இயற்கையே.

பல்வேறு ஊடகங்களில் பல்வேறு விதமான, ஒன்றுக்கொன்று முரண்பட்ட, தவறான தகவல்கள் அடங்கிய வரலாறும் இப்போது வலம் வருகிறது, வந்து கொண்டிருக்கிறது. எனவே, சபைமக்கள் நமது கோவில், நமது சபையின் தொடக்கம், கோவில் நிறுவுதல் திட்டமிட்ட ஆண்டு (Planning Year of Church Planting), கோவில் நிறுவன நாள் (The Foundation Day), கோவில் அர்ப்பண நாள் (Dedication Day), சபை நாள் (The Church Day) இவைதனைக் குறித்த, தமது இயல்பான, இயற்கையான ஐயத்தைப் போக்கும் அளவில், கீழ்க்கண்ட ஒரு சிறு குறிப்பு தரப்பட்டுள்ளது நமது கோவில், நமது சபையின் வரலாற்றில் (வரலாற்று நூலில்) இவை குறித்த முழுத்தகவல்களும் இடம் பெறும்.

## 1817

சாள்ஸ் மீட் (Charles Mead) 1817 டிசம்பர்த் திங்கள் அன்றைய குளச்சல் துறைமுகத்தை அடைந்து, மைலாடியைச் சென்றடைகிறார். மைலாடியைவிட நாகர்கோவிலுக்கு இலண்டன் இறைப்பணி இயக்க (London Missionary Society) தலைமையிடத்தை மாற்றினால் இறைப்பணியும், இயக்க வளர்ச்சியும் பெரிதளவில் முன்னேறும் என்ற நம்பிக்கையுடன், நாகர்கோவிலுக்குத் தலைமையிடம் 1818 இல் மாற்றப்படுகிறது.

## 1818

இதே ஆண்டில் (1818 இல்) ஒரு சாதாரண வகுப்பறையில் சாள்ஸ் மீட் தொழுகை நடத்துகிறார். அன்று இச்சபை நாகர்கோவில் சபை (The Nagercoil Church) என்றே அழைக்கப்பட்டது. சாள்ஸ் மீடின் பணியாளர்கள், சாள்ஸ் மீடால் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டோரே இச்சபையின் தொடக்க கால உறுப்பினர்கள். அன்று கல்கோவில் கட்டுவதற்கான அடித்தளம் இடப்படவில்லை. ஆனால் 1818-ஆம் ஆண்டிலேயே, மிக்க தொலைநோக்குடன், 2000-க்கும் அதிகமானோர் ஒரே நேரம் அமர்ந்து ஆண்டவனைத் தொழ ஓர் ஆலயம் இந்த இடத்தில் எழுப்ப வேண்டுமென்ற தணியா ஆவல் இளம்போதகரான சாள்ஸ் மீடின் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்தது. அசாதாரண ஆற்றல் பெற்ற ஓர் ஆயர் அவர். துணிச்சல்காரர். யாருக்கும்

அஞ்சாதவர். எவ் இழப்புகள் வந்தாலும் தன் இலக்கிலிருந்து மாறா மனவலிமை கொண்டவர். அன்றைய திருவிதாங்கூர் மகாராணியிடமிருந்து, இடம் பெற்று, அவர் அனுமதியுடன் நாகரம்மன்கோவில் யானையும் பெற்று, சிப்பாய்க் குளம் அருகில் மலைத் தொடரில் பெருங்கற்களையும் அரசின் துணையுடன் பெற்று, தான் நாகர்கோவில் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றியதால் தன் கீழ் இருந்த சிறைக் கைதிகளை கட்டுமானப் பணியில் பயன்படுத்த முடிவும் மேற்கொண்டு, திருவிதாங்கூர் அரசு, இராமநாதபுரம் அரசு, தஞ்சை அரசு - மன்னர்களிடமிருந்து ஓரளவு நிதிக்கொடையும் பெற்று தனது கோவில் கட்டும் பணிகளைச் செவ்வனே திட்டமிட்ட ஆண்டு 1818.

1818-இல் ஒருபுறம் சிறிய இடத்தில் (புளியமூட்டுப் பள்ளியில்) நாகர்கோவில் சபைத் தொழுகை ஒழுங்காக நடைபெற்று வருகிறது. ஆனால் கல்க்கோவில் இன்னமும் கட்டப்படவில்லை. சாள்ஸ் மீட்தான் போதகர். தனது பணிக்குத் துணையாக சபைப் பணியாளரை நியமித்துக் கொள்கிறார். அதே 1818-ஆம் ஆண்டில் கல்க்கோவில் கட்டுவதற்கான அனைத்துத் திட்டங்களையும் அழகுற அமைத்து விடுகிறார். செயலில் இறங்கவும் தயாராகிவிட்டார். இத்தனையும் நடந்தது 1818-இல். ஒருவகையில் சொல்லப்போனால் (இன்றைய நமது கஸ்பா சபை) அன்றைய நாகர்கோவில் சபை தொடங்கிய ஆண்டு 1818 ஆகும். எனவே 1818 நாகர்கோவில் சபைக்கான கோவில் கட்டுதல் திட்டமிட்ட ஆண்டு (Planning Year of Church Construction).

## 1819

தான் முறையாகத் திட்டமிட்டு, தனது முழுமை நிறைந்த திட்டத்தினை, கல்க்கோவில் கட்டும் பணியைத் தொடங்கின நாள் 01.01.1819. 01.01.1819 சபைக் கட்டுமானப் பணி தொடங்கிய நாள் (The Foundation Day). தனது நண்பர் ரிச்சர்ட் நில் (Richard Knill) உடல் நலக்குறைவால் இப்பகுதிக்கு வந்தால் உடல் நலம் முன்னேறும் என சாள்ஸ் மீடின் விருந்தாளியாக 1818-இல் நாகர்கோவில் வருகிறார். ஏற்கனவே தனது உள்ளத்தில் கருக்கொண்டிருந்து மாபெரும் இறைத்திட்டமான கல்க்கோவில் கட்டும் பணியை, கல்க்கோவிலுக்கு அடித்தளமிட்டு கட்டுமானப் பணியைத் தொடங்க புத்தாண்டின் முதல் நாளைத் தெரிவு செய்து, தனது இன்னுயிர் நண்பர் ரிச்சர்ட் நில்லால் அடிக்கல் நாட்டப்பட வேண்டுமென விழைந்து, 01.01.1819-இல் ரிச்சர்ட் நில் தென்மேற்கு மூலையில் கல்கோவிலுக்கான அடிக்கல் நாட்டினார் ஆண்டவருக்கு நன்றி செலுத்தினர். அளவிட முடியா ஆனந்தம் உள்ளத்தில், அணைக் கட்டையும் மீறி பீறிட்டுப் பாய்ந்தெழுந்து ஓடும் வெள்ளம் போல், அவர் உள்ளத்தில் கரைபுரண்டோடியது. 1819 (01.01.1819) கல்க்கோவில் நிறுவனத் தொடக்க நாள் (The Foundation Day). மீண்டும் நம் நினைவிற் கொள்ளுவோம், நன்றாக நாம் நினைவில் நிறுத்துவோம்.

1818 - நாகர்கோவில் சபை தொடங்கிய ஆண்டு கல்க்கோவில் கட்டுமானப் பணி திட்டமிடப்பட்ட ஆண்டு. (The Planning Year of Church Construction)

1819 - கல்க்கோவிலுக்கு அடித்தளமிட்ட, அடிக்கல் நாட்டிய நாள் (The Foundation Day)

## 1843

அடிக்கல் நாட்டி (1819) கால் நூற்றாண்டுப் பணியின் நிறைவாக, இவ்வாண்டுதான்(1843) கல்க்கோவில் கட்டுமானப்பணி, கதவுகள், சாளரகங்கள் இன்றி, ஓலைவேயப்பட்ட கூரையுடன் ஆண்டவருக்குள் அர்ப்பணம் செய்யப்பட்ட (The Dedication Day) ஆண்டு. 1819-இல் சாள்ஸ் மீடுடன் இணைந்து பணியாற்ற இலண்டன் இறைப்பணி இயக்கம் சாள்ஸ் மால்ற் (Charles Mault) என்ற இனிமைமிகு, இறைப்பற்றுமிகு, அமைதியான இறைத் தொண்டரை நாகர்கோவிலுக்கு (தென் திருவிதாங்கூர் பகுதிக்கு) அனுப்பிவைக்கிறது. சாள்ஸ் மீடும், சாள்ஸ் மால்ற்றும் இரு துருவங்களைப் போன்றவர்கள். முன்னவர் புயல், பின்னவர் தென்றல். முன்னவர் துணிச்சலோடு எவர்வரினும் அஞ்சேன் என முன்னடி எடுத்து வைப்பவர். பின்னவர் அமைதியோடு அடக்கமாக தன் ஒவ்வொரு அடிகயையும் அளந்து எடுத்து வைப்பவர். முன்னவர் சமயப் பணியோடு சமூக விடுதலை இயக்கத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர் (நம் சபை மக்களுக்கு சமூக, கல்வி, அரசியல் விடுதலை பெற்றுத் தந்ததில் இவர் பங்கு அளவிடற்கரியது). பின்னவரோ சமய சமூகப் பணியோடு தன்னை நிறுத்திக் கொண்டவர். எனவேதான் சாள்ஸ் மீட் தென்திருவிதாங்கூர் இறைப்பணியின் தந்தை என நன்றியோடு அழைக்கப்படுகிறார். (Father of the South Travancore Mission).

இதற்கிடையில் தென்திருவிதாங்கூர் இறைப்பணி கிழக்கு மேற்கு என இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, கல்க்கோவிலைத் திட்டமிட்டு, கருத்துரு உருவாக்கி, ஆணைகள் பெற்று, கட்டுமானப் பொருட்களும் பெற்று, நிதிக்கொடையும் பெற்று, கட்டுமானப் பணியையும் தொடங்கி மூன்று ஆண்டுகள் ஓய்வின்றி உழைத்த சாள்ஸ் மீட், நெய்யூரைத் தலைமையிடமாகக் கொண்ட மேற்குப் பகுதிக்குப் பொறுப்பாளராகவும், நாகர்கோவிலைத் தலைமையாகக் கொண்ட கிழக்குப் பகுதிக்கு சாள்ஸ் மால்ற் பொறுப்பாளராகவும் தமக்குத் தாமே இறைப்பணியைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

எனவே 1822-ஆம் ஆண்டிலிருந்து கல்க்கோவிலைக் கட்டிமுடிக்கும் பொறுப்பு, பாரம் முழுமையாக சாள்ஸ் மால்ற்றின் தோள்மேல் சுமத்தப்படுகிறது. சிலுவை சுமந்த உணர்வுடன் தன்னந்தனியனாக இப்பணியை மேற்கொள்கிறார் மால்ற். கோர வெயிலின் கோடை வெப்பம் தாங்க இயலாது ஓரிருமுறை கட்டுமானப் பணியை மேற்பார்வையிடும் போது மயக்கமாகி விழுந்தேன் என மனமுருக மால்ற் தனது கல்க்கோவில் கட்டும் பணியை நினைவு கூருகிறார். 1843-ஆம் ஆண்டு முழுமை செய்யப்படாத கல்க்கோவில் ஆண்டவருக்குள் அர்ப்பணம் செய்யப்படுகிறது. 1843-ஆம் ஆண்டு கல்க்கோவில் அர்ப்பணம் செய்யப்பட்ட நாள் (The Dedication Day).

## 1866

இதற்கிடையில், பல இறைத் தொண்டர்கள் மேனாட்டிலிருந்து ஒருவர் பின் ஒருவராக வந்து, நாகர்கோவில் சபையை (The Nagercoil Church) இறைவனுக்குள் நடத்தச் செல்கின்றனர். சபை வளர்ந்தது. மக்கள் பெருகினர். வெள்ளம் போல் மக்கள் கூட்டம். இலண்டன் இறைப்பணி இயக்கம் நமக்கு ஈந்தளித்துள்ள கல்விக் கூடங்கள், நம்மை ஆற்றல்படுத்தின. அறிவுசார்

மக்கள் குழுவாக மாறினோம். அருந்தமிழும், அழகுமிகு ஆங்கிலமும் நம் மூதாதையர் நாவில் நர்த்தனமாடின. நீலகண்டன் தேவதாசன், C. ஏசுவடியான், C. மாசில்லாமணி போன்ற சிறந்த இறையியல் கல்வி பெற்ற போதகர்களும், மேனாட்டு இறைப் பணியாளர்களே வியக்கும் வண்ணம், MD.Daniel, Paul Daniel, CM Agur போன்ற நல்ல ஆங்கிலக் கவிஞர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் இச்சமூகத்தில் உருவாகினர். சபைகளை இவர்களே பார்த்துக் கொள்வர், மேம்படுத்துவர், புதுவேகத்துடன் புதுப் பாதையில் இட்டுச் செல்வர் என்ற நம்பிக்கை இலண்டன் இறைப்பணி இயக்கத்தினரிடம் வேரூன்றி வளரத் தொடங்கியது 1850களில் ஆகும்.

நம் சபை மறக்க முடியாத இரு இறைத் தொண்டர்கள் John Joll Dennis, 34 வயதில் (1864) தனது இன்னுயிரை இழந்து, நமது கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். James Duthie, ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அளவிடற்கரிய அரும்பணியாற்றி, இறையழைப்பு பெற்று நமது கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். இக்காலத்தில்தான் நாகர்கோவில் சபை (கல்க்கோவில்) ஆயர்திரு மண்டலமாக (Pastorate) முதன்முதலாக நாட்டுப் போதகர்களாலேயே நிர்வகிக்கும் முறையில் 1866 பெப்ருவரி 13-ஆம் நாள் மேம்படுத்தப்பட்டது. John Joll Dennis இதைப் பார்ப்பதற்கு இறைவனின் திருவுளம் வேறுவகையாக அமைந்ததால், தன் கல்லறையிலிருந்து ஆசியையும் வழங்கியிருப்பார். துடிப்பான, துணிச்சலாக, தன்னுயிரையும் துச்சமென மதித்து நம் சமூக மக்களின் சமூகப் பொருளாதார விடுதலைக்காக குரல் கொடுத்த இளம் பெரியார். அன்றைய இறைப்பணியாளர்களில் புரட்சி வீரர் என்று இவரைச் சபை வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். நம் சபை ஆயர்திரு மண்டலமாக மாறத் திட்டமிட்ட நேரத்தில் இருத்து இவ் இளம்பெரியார், மோசே கானானைக் காண இயலாது போன்று, 1866-இல் கல்க்கோவில் ஆயர் திருமண்டலமாக உருமாற்றம் பெற்றதனைக் காண இயலாது போயிற்று.

ஆனால் 1866-இல் ஆயர்திரு மண்டலமாக மாற்றம் பெற்ற நான்கு சபைகளில் ஒன்றிற்கு டென்னிஸ்புரம் என்று பெயரிடப்பட்டது, அன்னாரின் குறுகிய கால பெரும் பங்களிப்பை, வரலாற்றுச் சிறப்புமிக்க பணியைத் தெள்ளிதின் காட்டும். தென்திருவிதாங்கூர் வரலாற்றில் ஓர் இறைத்தொண்டர் பெயரால் ஒரு சபை பெயரிடப்பட்டது, அழைக்கப்பட்டது, இதுவே முதன்முறையாகும்.

நாகர்கோவில், நெய்யூர், திட்டுவிளை, டென்னிஸ்புரம் (இறச்சகுளம் அருகில்) இந்நான்கு திருச்சபைகளும் தான் முதன்முதலில், இலண்டன் இறைப்பணி இயக்கத் தென்திருவிதாங்கூர் பணியின் மகத்தான வரலாற்றில் ஆயர்திருமண்டலமாக 1866-ஆம் ஆண்டு மேம்படுத்தப்பட்டன. சாள்ஸ் மால்ற்றால் அடையாளம் காட்டப்பட்ட நீலகண்டன் தேவதாசன் முதல் ஆயராக, நாட்டு ஆயராகப் பொறுப்பேற்றார். அருகிலிருந்து உதவிக்கை நீட்டி வழி நடத்திச் செல்ல ஜேம்ஸ் டதியும் இருந்தார் (நாகர்கோவில் YMCA, மணிமேடை மணிக்கூண்டு, Mault Missionary Society, Scott Christian College இவையனைத்தையும் இப்பெரியாரின் இணையிலா இன்பக் கொடை, இம்மாவட்ட மக்களுக்கு, இம்மாவட்டத்தின் அனைத்து மக்களுக்கும்). ஆக,

1866 - நமது சபை ஆயர் திருமண்டலமாக, நம்மைக் கொண்டு, நாமே, நம்மை வழிநடத்திக் கொள்ள பன்முக மக்கள் ஆளுகை அல்லது சபை ஆளுகைக்குட்படுத்திய நாள். இந்நாள் நம் சபை வரலாற்றில் மறக்கமுடியாத வரலாற்று முக்கியத்துவம் கொண்ட நாள். ஒருவகையில் சொல்லப்போனால், மேனாட்டவர் ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை பெற்றது போல, மக்களாட்சிக்குத் தன்னை உட்படுத்தி கொண்டது போல், நமது சபையும் மக்கள் ஆளுகைக்கு தன்னை உட்படுத்திக் கொண்ட ஆண்டு 1866.

இவ்வாண்டைத்தான், 1916 யூபிலி ஆண்டு அன்று, பொன்விழா ஆண்டு அன்று (1866 - 1916), அன்றைய நமது மூதாதையர்கள், போதகர்கள், சபைக்குழு, சபை மக்கள், இதன் வரலாற்று முக்கியத்துவதைக் கருத்திற்கொண்டு, இந்நாளினை 1916-ஆம் ஆண்டு முதல் நாம் சபை நாளாக(The Church Day), நம்மை நாமே இறைவனுக்குள் தாழ்த்தி, நன்றி வெளிப்பாட்டு நாளாகக் கொண்டாட வேண்டுமென, ஐம்பதாம் ஆண்டினைச் சபை நாளாகக் கொண்டாடினர். இப்படித்தான் நம் சபை நாள் பிறந்தது.

ஆக, சபை தொடங்கி, கோவில் கட்ட திட்டமிடப்பட்ட நாள் (Genesis of the Nagercoil Church & Church Construction Planning Year) 1818

கோவில் கட்டுமானப் பணி தொடங்கிய நாள் (The Foundation Day) 1819 (1.1.1819)

சபை அர்ப்பண நாள் (The Dedication Day) 1843

சபை நாள் (The Church Day) 1866 (13.2.1866)
(ஆயர் திருமண்டலமாக மேம்படுத்தப்பட்ட நாள்

இந்நான்கு நாட்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைத்து பல்வேறு கொண்டாட்டங்களாக நம்மை, நாம் கடந்துவந்த பாதையைப் பின்நோக்கிப் பார்க்க வைக்கின்றன.

சபை நாளை 1916-இல் (1866-1916) (13.2.1916) கொண்டாடி, நம் மூதாதையர், கோவில் நிறுவின நாளின் (1819-1919) நூற்றாண்டு விழாவினை அடுத்த மூன்றே ஆண்டுகளில் 1919-இல் கொண்டாடி மகிழ்ந்தனர். முந்தைய நாள் சபை நாள். பிந்தைய நாள் (கோவில்) நிறுவன நாள்.

இன்று 152-ஆவது சபை நாளைக் கொண்டாடும் ஆண்டில் (2018, 1866 - 2018), நாம் நம் சபை நிறுவன நாளின் இருநூறாம் ஆண்டிற்குள் (1818-19 to 2018-2019) அடியெடுத்து வைக்க உள்ளோம். ஆண்டவரின் வழிநடத்துதல் அற்புதமானது. நாம் கடந்து வந்த பாதை கடினமானது, ஆனால் இனிமைமிகு பயன்களை இச்சமூகத்திற்குத் தந்துள்ளது, நம் சபையின் வளர்ச்சி நம் வளர்ச்சி மட்டுமல்ல, குமரி மண்ணின், அனைத்து சமூகங்களின் வளர்ச்சி. நமது சமூக, கல்வி, மக்கள் நலவாழ்வு, பண்பாட்டு, பொருளாதாரத் தளங்களில் ஏன், அரசியல் தளத்தில் கூட, நாம், குறிப்பாக இலண்டன் இறைப்பணி இயக்க மேனாட்டு, இறைத் தொண்டர்கள், நம் மக்களோடு இணைந்து நடத்திய சமூக நீதிக்கான இயக்கங்கள், இவ்இயக்கங்களின் பலன்கள், நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் என்ற வாக்கிற்கிணங்க அனைத்து தரப்பு மக்களையும் அழகுறச் சென்றடைத்துள்ளது.

நம் வளர்ச்சியில் அனைத்து சமூக வளர்ச்சியும் உள்ளடக்கி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு (inclusive growth) வித்திட்ட பணி, பயணம் இலண்டன் இறைப்பணி இயக்கப் பணி, பயணம். இவ்உள்ளடக்கிய பணியின் காரணமாகத்தான் மக்களாட்சி, பொறையுடமை, பன்முகத்தன்மை, விட்டுக்கொடுத்தல், சமூக சமய நல்லிணக்கம், அனைத்து சமூக சமயமக்களையும் சகோதர, சகோதரிகளாக கொண்டு இணக்கத்துடன் எல்லோரும் முன்னேறிச் செல்லும் இணக்கமான சமூக வளர்ச்சி, இவையனைத்திற்கும் வித்திட்ட, அமைதிப் புரட்சியை இம்மண்ணில் தவழவிட் பெருமை, 1857-முதல் இந்திய விடுதலைப்போர் என்ற (வெள்ளையன் சிப்பாய்க் கலகம் எனப் பெயரிட்டு அழைத்த ) மாபெரும் இயக்கத்திற்கே முன்னோடியாக அமைந்தது இலண்டன் இறைப்பணி இயக்கப் பணியே. ஆக, விடுதலைப் போரை (1806-1859), சமூக நீதிக்கான நீண்ட நெடிய பயணத்தை (1807-1851), அடித்தட்டு மக்களை ஆற்றல்படுத்தும் கல்விப் பணியை (1809,1818, 1819, 1820, 1893...), பெண் உரிமைப் போரை (1819-1859) முதன் முதலில் இம்மண்ணில் பெருமையோடு, நெஞ்சு நிமிர்ந்து, நீதி, நேர்மை, தன் கட்டுப்பாடு, அனைத்து மக்களையும் அணைத்துச் சென்று வழிநடத்திய பெருமை நமக்குண்டு. அன்றைய இலண்டன் இறைப்பணி இயக்கத்தின் மையம் கல்க்கோவிலே, நாகர்கோவில் சபையே, (ஒருவேளை இன்று நாம் கஸ்பா சபையென அழைக்கலாம்). எனவே, இம்மாபெரும் மக்கள் இயக்கத்தினை, இறைமக்கள் இயக்கத்தினையே தம் இறைப்பணியாக இம்மாவட்டத்து மக்களுக்குத் தந்த பெருமை, ஈந்துள்ள இனிய அனுபவம் கல்க்கோவிலுக்கு மட்டுமே உண்டு.

கல்கோவில் நிறுவன நாளின் (The Foundation Day 1818-19 to 2018-19) இருநூறாம் ஆண்டிற்குள் அடியெடுத்து வைக்க உள்ள நாம் அமைதியாக சமய, சமூக, கல்வி, பொருளாதார, பண்பாட்டு, நலவாழ்வு, அரசியல் தளங்களில் ஓர் அமைதிப் புரட்சியை ஏற்படுத்திய மையப் பணியில் பெரும்பங்கு வகித்தது கல்கோவில் என்ற பெருமையை, தாழ்மையோடு, பணிவோடு இறைவனுக்குள் நாம் புரிந்துகொள்வதோடு, நாம் தொடர்ந்து சமய-சமூக மாற்றங்களின் சமய-சமூக நல்லிணக்கத்தின் கருவிகளாக கடவுளின் கையில் நம்மை ஒப்படைத்து, பின்னோக்கு நன்றியுடன் ஏறெடுத்துப் பார்த்து, முன்னோக்கி சாள்ஸ் மீட்டின் அதிவீரத்தோடும், சாள்ஸ் மால்ற்றின் அடக்கான அமைதியோடும், அனைத்து மக்களின் விடுதலையே ஆண்டவர் நமக்கும் வழங்கும் விடுதலை என்ற உணர்வோடு நமது 200 ஆண்டுகள் பணியைத் தொடர்வோம். ஆண்டவரே நம்மை ஆற்றலோடு வழிநடத்துவாராக.

மாற்றத்தின் பணத்தைத் தொடங்கி வைத்தது
மறைக்கப்பட்ட பிச்சைக்குடியிருப்பு
மாற்றத்தின் பயணத்தை நம் மாவட்டத்தில் முன்னெடுத்துச்
சென்றது மகராசன் வேதமாணிக்கம்
மாற்றத்தின் பயணத்தை மக்கள் இயக்கமாக மாற்றியது
ரிங்கல்தௌபேயின் மயிலாடி
மாற்றத்தின் இலட்சிய முகடுகளை முழுமனதோடு உள்வாங்கி
இதயசுத்தியோடு இலக்குகளை எட்ட வைத்தது
அமைதிப் புரட்சியின் ஆன்மீகத் தொட்டில் கல்கோவில், கல்கோவில்தான்.

அன்று இலண்டன் இறைப்பணி இயக்க சமய-சமூக சமூக நீதிக்கான நீண்ட நெடும் பயணத்தில் மையமாக, மைல்கல்லாக, உயிர்த் துடிப்பாக, ஏன் அடையாளமாக அமைந்தது, கல்க்கோவில்தான்.

1818-நாகர்கோவில் சபை, தனக்கென கோவில் இல்லாது தொடங்கப்பட்டு ஒழுங்காக, முறையாக தொழுகை நடைபெற்றும், இவ்வாண்டை நமது முன்னோர்கள் விழாவாகக் கொண்டாடிய வரலாற்றுக் குறிப்புகள் காணப்படவில்லை.

அதுபோல் 1843-கல்க்கோவில் அர்ப்பணம் செய்யப்பட்ட அரும்பெரும் நாளையும் விழாவாகக் கொண்டாடவில்லை. சபை வரலாற்றின் மூன்றாவது மைல் கல்லாகவே கொண்டனர்.

ஆயின் கல்க்கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்ட நாளை 01.011819, கோவில் நிறுவன நாளாகக் கொண்டு, 100, 125, 150, 175 ஆண்டு விழாக்களை மிக உற்சாகத்துடன் கொண்டாடி, *ஆண்டு மலரும்* வெளியிடப்பட்டது (150).

அதுபோல 1866 இலண்டன் இறைப்பணி இயக்க வரலாற்றில் முதன் முதலில் நாகர்கோவில் சபை ஆயர் திருமண்டலமாக மேம்படுத்தப்பட்ட நாளினை (13.02.1866) சபை நாளாகப் பெரும் விழாவாகக் கொண்டாடி, இறைவனுக்கு நன்றி செலுத்தினர். 100,125, 150 ஆண்டு விழாக்களைக் கொண்டாடி, *ஆண்டு மலரும்* வெளியிடப்பட்டது (125).

எனவே 1819, 1866 இவ்விரு ஆண்டுகளையும் மையமாக வைத்து சபை நிறுவன நாள், சபை நாள் எனக் கணக்கிட்டால் நூறு ஆண்டு, நூற்று ஐம்பது ஆண்டு, 200 ஆண்டு என நம் உள்மனதில் நம்மையறியாமலே நாம் எழுப்பும் கேள்விகளுக்கும் பதில் கிடைக்கும்.

| | |
|---|---|
| 1819 - சபை நிறுவன நாள் | 1866 - சபைநாள் |
| 01.01.1819 The Foundation Day | சபை ஆயர் திருமண்டலமாக மேம்படுத்தப்பட்ட நாள் |
| 1919 - நூற்றாண்டு | 13.02.1866 The Church Day |
| 1944 - நூற்று இருபத்தைந்து ஆண்டு | 1916 - ஐம்பதாண்டு |
| 1969 - நூற்று ஐம்பது ஆண்டு *Triple Jubilee Souvenir* | 1966 - நூற்றாண்டு |
| 1994- நூற்று எழுபத்துஐந்து ஆண்டு | 1991 - நூற்று இருபத்து ஐந்து ஆண்டு *125th Church Day Souvenir* |
| 2019 - இருநூறு ஆண்டு | 2016 - நூற்று ஐம்பது ஆண்டு |

நாகர்கோவில் சபை தொடக்கத்திலிருந்தே இதனைக் கட்டியெழுப்பிய சாள்ஸ் மீடே முதல் ஆயராகப் பணியாற்றினார். 1818 முதல் 1819 வரை, ஜனவரி முதல் நாள் வரை 1819 ஜனவரியில் தஞ்சை சென்று Johanna Celestina Mead-ஐ இரண்டாவது மனைவியாக, தன் முதல் மனைவியைக் கப்பல் பயணத்தில் மகப்பேற்றின் போது இழந்த, சாள்ஸ்மீட், மறுமணம்

செய்து, 1819 பிப்ரவரி 15ஆம் நாள், தன் இளம் மனைவியுடன் நாகர்கோவில் வருகிறார். ஆக, 1819 ஜனவரி முழுவதும் பெப்ருவரி 15ஆம் நாள் வரை கல்க்கோவில் சபைக்கும் பொறுப்பு, மீடோடு தங்கி, கல்கோவிலுக்கு அடிக்கல் நாட்டிய ரிச்சர்ட் நில்லிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் நாகர்கோவில் சபையின் இரண்டாவது ஆயர்.

அதனைத் தொடர்ந்து 16.02.1819 முதல் சாள்ஸ் மீட் பொறுப்பேற்கிறார். உடல்நலக் குறைவினால் ரிச்சர்ட் நில் இங்கிலாந்திற்குத் திரும்பிச் செல்கிறார். பின்னர் 1822-இல், மீட் மேற்கு நெய்யூர்ப் பகுதியின் பொறுப்பாளராக பணிப் பொறுப்பேற்றுச் சென்ற போது, சாள்ஸ் மால்ற் மூன்றாவது ஆயராகப் பொறுப்பேற்கிறார். மிகக் கடுமையான நிதிநெருக்கடி, தாங்கமுடியாத அனல் கக்கும் கோடை வெயில், உடல்நலக் குறைவினால் அவதி இவற்றிற்கிடையே ஆசியாவின் அன்றைய மிகப்பெரிய கோவில் கட்டி முடித்த பெருமை சாள்ஸ் மால்ற்றையே சாரும். 1843-இல் கோவில் அர்ப்பணம் செய்யப்பட்டது. சாள்ஸ் மால்ற் தன் மனைவி மார்த்தா மால்ற்றுடன் 1855-ஆம் ஆண்டு உடல்நலம் மிகவும் குன்றியவராய், 36 ஆண்டுகள் பணிக்குப் பின்னர் தன் தாய்நாடு திரும்பினார். 17.10.1858-இல் இறையழைப்புப் பெற்றார்.

இவர்கள்தான் கல்க்கோவில் அர்ப்பணம் செய்யப்படும் நாள் வரை கல்க்கோவிலைப் பொறுப்பேற்று நடத்திய குருமார்.

1. சாள்ஸ் மீட் 1818-1819 ஜனவரித் தொடக்கம்
2. ரிச்சர்ட் நில் ஜனவரித் தொடக்கம் முதல் 15.02.1819 வரை
3. சாள்ஸ் மீட் 16.02.1819 முதல் 1822-1825 வரை
4. சாள்ஸ் மால்ற் 1822-1825 முதல் 1855 வரை

William Miller, Charles Miller உள்ளிட்ட பல இறைத் தொண்டர்கள் கல்க்கோவிலில் இணைந்து பணியாற்றியுள்ளனர். ஆயர் திருமண்டிலமாக இச்சபை மேம்படுத்தப்பட்டபோது, 1866-ஆம் ஆண்டில் James Duthie - யின் பொறுப்பான மேற்பார்வையில் கல்க்கோவில் என்ற நாகர்கோவில் சபை இருந்தது.

## நாகர்கோவில் சபை (The Nagercoil Church)
## கோவில் நிறுவன நாள் முதல் சபை நாள் வரை

*நாகர்கோவில் சபையின் (The Nagercoil Church) தோற்றம் (1818), சபைக்கென (கல்க்) கோவில் கட்டும் பணித் தொடக்கம் (நிறுவன நாள்: 01.01.1819), கோவில் அர்ப்பணம் (1843), சபை ஆயர் மண்டிலமாக மேம்படுத்தப்பட்ட நாள் வரை (சபை நாள் 13.02.1866), சபைக் குறிப்பேடு நிகழ்வுகள் ஆண்டு வாரியாக சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன. இறைவனுக்குள் நன்றி செலுத்த வேண்டிய ஈடிணையிலா இரு பெரும் இறைத் தொண்டர்கள் சாள்ஸ் மீட் (Charles Mead), சாள்ஸ் மால்ற் (Charles Mault). முன்னவர் கோவில் கட்டுமானப் பணியைத் தொலைநோக்கோடு தொடங்கி வைத்தவர் (1819), பின்னவர் மிகக் கடினமான சூழலில் கட்டுமானப் பணியை நிறைவு செய்து, கோவிலை ஆண்டவருக்குள் அர்ப்பணம் செய்தவர் (1843).*

1817 டிசம்பர் - சாள்ஸ் மீட் குளச்சல் துறைமுகம் வந்தடைதல் மகராசன் வேதமாணிக்கம் உள்ளிட்டோர் வரவேற்று, ரிங்கல்தௌபே தொடங்கிய முதல் அருட்பணித் தளம் (1806) மைலாடிக்கு அழைத்துச் செல்லல்.

1818 இலண்டன் இறைப் பணி இயக்க தலைமைப் பணியிடத்தை மீட் நாகர்கோவிலுக்கு மாற்றம் செய்தல். Colonel Munro துணையுடன் திருவிதாங்கூர் அரசியின் அனுமதியுடன் கோவில் கட்டுவதற்கான இடம் பெறுதல், மன்றோ பங்களாவில் தங்குதல் (கோவிலின் வடக்குப்புறம்). புதிதாகத் தொடங்கப்பட்ட பள்ளி - வகுப்பறையில் நாகர்கோவில் சபை தொடங்கப்படல்-ஒழுங்காகத் தொழுகை நடத்துதல். நாகர்கோவில் சபையின் முதல் போதகர் அருள்திரு. சாள்ஸ் மீட். கல்க்கோவில் கட்டியெழுப்ப உயரிய திட்டமிடல்.

1819 ஜனவரி 01.01.1819 அன்று மீடின் நண்பர் ரிச்சர்ட் நில் (Richard Knill) தென் மேற்கு மூலையில் கல்க்கோவிலுக்கு அடிக்கல் நாட்டல்- இதுதான் கோவில் நிறுவன நாள் The Foundation Day.

1819 ஜனவரி முதல் பிப்ரவரி 15 வரை, ரிச்சர்ட் நில் கையில் நாகர்கோவில் சபையை ஒப்படைத்து, தஞ்சாவூருக்கு மீட் செல்லல், Johanna Celestina Horst - 13.1.1819 அன்று திருமணம் செய்து, 15.02.1819 அன்று நாகர்கோவிலுக்குத் திரும்புதல்.

1819 ஜனவரி முதல் பெப்ருவரி 15 வரை நாகர்கோவில் சபையின் இரண்டாம் போதகர் அருள்திரு. ரிச்சர்ட் நில்.
டிசம்பர் மாதம் சாள்ஸ் மால்ற், மார்த்தா மால்ற் நாகர்கோவில் வந்தடைதல், மீடோடு இணைந்து, அதே பங்களாவில் தங்கி இறைப் பணியை முன்னெடுத்துச் செல்லல்.

1820 மே மாதம் ஜான் ஸ்மித் (The Rev. John Smith) நாகர்கோவில் பணித்தளம் வந்தடைதல். துணைப் போதகர் பணி. தச்சுவேலை நன்கு அறிந்தவர். கட்டுமானப் பணிகளை மூன்று ஆண்டுகள் மேற்பார்வையிட்டார்.

1821 மால்ற் தெற்கு பங்களா கட்டிக்குடியேறுதல். பின்னர் இதுவே ஆலன் நினைவு மண்டபமாயிற்று.

1822/1825/1828
மீட், மால்ற் தென் திருவிதாங்கூர் இறைப் பணியை அவர்களுக்குள்ளாகப் பகிர்ந்து, கிழக்குப் பகுதியை மால்றும், மேற்குப் பகுதியை மீடும் பொறுப்பேற்றல்.
மீட் மெற்குப் பகுதி செல்ல, மால்ற் கல்க்கோவிலின் மூன்றாவது போதகராகப் பொறுப்பேற்றல்.

1843 கல்க்கோவில் ஆண்டவருக்குள் அர்ப்பணம் செய்யப்படல்.
மீட், மால்ற்றின் எல்லை கடந்த மகிழ்ச்சி.

1855 மால்ற் தாய்நாட்டிற்கு திரும்புதல். லூயிஸ் (சாந்தபுரம்), ரசல் (ஜேம்ஸ் டவுண்) இடைக்காலப் பொறுப்பேற்றல்

1856 சபை வரலாற்றாசிரியர்கள் புரட்சிப்புயல் எனச்சுட்டும் John Joll Dennis பொறுப்பேற்றல்.

1859 சபை வரலாற்றாசிரியர்கள் ஆய்ந்து அவிந்து அடங்கிய அறிவுச் சான்றோன் எனச்சுட்டும் ஜேம்ஸ் டதி நாகர்கோவில் வருதல், டென்னிசுடன் இணைந்து பணியாற்றல்.

1864 இளம்புயல் டென்னிசின் அகால மரணம், 34ஆவது வயதில். சபைக்குப் பேரிழப்பு. நம் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம்

1866 நாகர்கோவில் சபை ஆயர்திரு மண்டிலமாக மேம்படுத்தப்படல் (13.02.1866). அருள்திரு. நீலகண்டன் தேவதாசன் முதல் நாட்டுப் போதகராகப் பொறுப்பேற்றல். 1916ஆம் ஆண்டு முதல் நம் மூதாதையர் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்நன்னாளை சபை நாளாகக் (The Church Day) கொண்டாடுதல்.

## கல்க்கோவில்
## ஓர் அமைதிப் புரட்சியின் ஆன்மீகத் தொட்டில்

(The Spiritual Cradle of a Silent Revolution)

*19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட பிச்சைக்குடியிருப்பில் தொடங்கி (1800-களில்), வேதமாணிக்கம் - ரிங்கல்தொளபே மைலாடி வழி பயணித்து (1806), சமய சமூக ஆன்மீகம் எனக் கூறு போடாத முழுமைபெற்ற, முழு விடுதலைக்கு இலண்டன் இறைப்பணி இயக்க இறைத்தொண்டர்களின் நற்செய்திப்பணி, ஒடுக்கப்பட்ட மானிடத்திற்கான விடுதலைப் பணி, கருக்கொண்டு-ஒன்று, இரண்டு, மூன்று என மகப்பேற்றினைத் தந்து, ஓர் அமைதிப் புரட்சியை (கல்வி, சமூக, சமய, பண்பாட்டு, மருத்துவ-மக்கள் நலவாழ்வு, விளையாட்டுத் தளங்கள்) உருவாக்க வித்திட்ட மையம் கல்க்கோவிலே (1819). அயோத்திதாசர், ஃபூலே, பெரியார், காந்தி, நேரு, அம்பேத்கார், ஏன், இந்திய அரசியல் சட்டம் - சமூக நீதிக்கான பெரும் பயணத்தைத் தொடங்குவதற்கும் அரை நூற்றாண்டிற்கு முன்னமே, சமூக நீதிக்காகக் குரலெழுப்பிய இறைத்தொண்டர்கள் குடிகொண்ட இடம் கல்க்கோவிலே. எனவே கல்க்கோவிலை ஓர் அமைதிப் புரட்சியின் ஆன்மிகத் தொட்டில் என அடையாளம் காட்டுவதே இம் மண்ணின் சரியான வரலாற்றுப் பார்வையாக அமையும்.*

*சமயப்பணியோடு சமூகப்பணியையும், மக்கள் விடுதலைக்காக, கல்க்கோவிலை மையமாகக் கொண்டு (தலைமையிடம்) நடத்தப்பட்ட நிகழ்வுகள்-குறிப்பேடு மிகச் சுருக்கமாக கீழேதரப்பட்டுள்ளன.*

1818 கல்விப் பணி- நாகர்கோவிலில் உண்டுறை பள்ளி தொடங்குதல்.

1819 செமினரி அமைத்தல், எல்லோருக்கும் கல்வி வாய்ப்பு, இரு மேனாள் மாணவர்கள் இராமராவ், நானுபிள்ளை திருவிதாங்கூர் அரசின் திவான்களாகப் பணியாற்றல். இக்கல்விக் கூடத்தைக் கண்ணுற்ற திருவிதாங்கூர் மன்னர் 1834-இல் இதேபோன்றதொரு பள்ளியைத் திருவனந்தபுரத்தில் தொடங்கல். 1809-இல் ரிங்கல்தொளபே தொடங்கிய ஆங்கிலப்பள்ளியின் வளர்ச்சி செமினரி. செமினரியிலிருந்து

உருவாகியவையே ஸ்காட் கிறிஸ்தவ மேனிலைப் பள்ளி (1819), ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (1893)

1819 ஏப்ரல் மாதம் ஊர்ப் பள்ளிக்கூடம் தொடங்குதல். Johanna Celestina Mead முதல் மகளிர் பள்ளி தொடங்குதல், முதல் ஆங்கிலப் பள்ளி- பின்னர் இதுவே டதி மகளிர் மேனிலைப் பள்ளியாக மாறியது. பெண் கல்வி, பெண் விடுதலைப் போரின் தொடக்கம்.

1820 Bazar School, அச்சுக்கூடம், தொழிற் கல்வி தொடக்கம் (கல்க்கோவிலின் பின்புறம்)

1821 மேல்தட்டு மற்றும் இசுலாமியப் பெண்களுக்கென தனிக் கல்விக் கூடம் தொடக்கம். Johanna, Martha வின் அரும்பெரும்பணி

1821 Johanna Celestina Mead - முதல் பெண் அருட்பணியாளர் Martha Mault - முதல் பெண் அருட்பணியாளர், பணிப் பகிர்வு, பெண்களுக்குத் தொழிற்கல்வி, தையல், எம்பிராய்டரி, lace industry... பெண்களை ஆற்றல்படுத்துதல்.

1822, 1828, 1830
தோள்சீலை அணிய உரிமைக்கான போராட்டம், அடக்கு முறை வரிகளுக்கெதிரான உரிமைக் குரல் - முதல் மனித உரிமைப்போர், சாள்ஸ் மீட் முன்னணியில் நிற்றல், கிறிஸ்தவர்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படல், முதல் பெண் விடுதலைப்போர்.

1824 தாக்கப்படும் கிறிஸ்தவர்களுக்கெதிரான மனித உரிமை மீறல் போர் (Human Rights Violation), சமூக நீதிக்கான நெடும் பயணம்.

1855 மேலாடை (தோள்சீலை) பிரகடனத்துக்கான உரிமைப்போர்.

1857,1859 தோள்சீலை/மேலாடை அனைவரும் அணியலாம் என்ற திருவிதாங்கூர் அரசியின் பிரகடனம். அடிமை வரிகள் நீக்கம். ஜான் ஜால் டென்னிசின் பங்களிப்பு.

1862 அனைத்து மக்களின் பயன்பாட்டிற்காக கோட்டாறு, வடசேரி, உள்ளிட்ட இடங்களில் வாசிப்புச் சாலைகள் தொடக்கம், Leah Duthie- யின் பங்களிப்பு.

சமய, சமூக, ஆன்மீகப் பணி மக்களின் ஒட்டுமொத்த உடல், உள்ள, உணர்வு விடுதலைக்கான, ஆற்றல்படுத்துவதற்கான, சமூக நீதிப்பணி தொடங்கி, தொடர்ந்து நடத்தி, மக்கள் பணியே, ஒட்டுமொத்த மக்களின் முழு விடுதலைப் பணியே, இறைப்பணியென, நற்செய்திப் பணியென 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக நடத்திக் காட்டிய பெருமை இலண்டன் இறைப்பணி இயக்கத்திற்கு உண்டு. அக்காலத்தில் கல்க்கோவில் தலைமையிடமாதலால், இச்சபையின் போதகர்களே தலைமை தாங்கி நடத்திய இம்மக்கள் இயக்கங்களின் மையமாகத் திகழ்ந்த இடம் கல்க்கோவிலே. ஓர் அமைதிப் புரட்சியின் ஆன்மீகத் தொட்டில் கல்க்கோவிலே.